ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1988/22 - 2016 ඔක්තෝබර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.10.13

*1988/22 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xii)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்,
ஆணைக்குழு.

கொழும்பு,
*2016, ஒற்றோபர் 12.*

#### கட்டளைச் சட்டம்

*1. இக்கட்டளைச் சட்டம் 2016 ஆம் அண்டின் 02 ஆம் இலக்க, உண்ணாட்டு மருத்துவ நிறுவகக் (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடுவதன் மீது வலுவுக்கு வருதலும் வேண்டும்.*

*2. 1996 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி 909 /13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 67/14 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க, உண்ணாட்டு மருத்துவ நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1)* அதன் 5 ஆம் பந்தியில், அப்பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் “ பட்டங்கள்” என்னும் சொல்லுக்குப் பதிலாகப் “பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டங்கள்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

*(2)* அதன் 12 ஆம் பந்தியில், அப்பந்தியின் (3) (எ) என்னும் உட்பந்தியில் “பட்டங்கள்” என்னும் சொல்லுக்குப் பதிலாகப் “பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டங்கள்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

*(3)* அதன் 13 ஆம் பந்தியில், “கற்கைத்துறை” என்னும் சொல்லுக்குப் பதிலாகப் “கற்கைத் துறைகள்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*10- 1667/1*

*ச.வ.பி. 21/78* (xii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ மற்றும் 24 ஆ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்,
ஆணைக்குழு.

கொழும்பு,
2016, ஒற்றோபர் 12.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடுவதன் மீது வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 1996 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி 909 /13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1995 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதிய 862/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1995 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 4 ஆம் பந்தியில், அப்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் “ பட்டங்கள்” என்னும் சொல்லுக்குப் பதிலாகப் “பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டங்கள்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அக்கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியில் அதன் 2 (ஊ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் ;

“(ஊ) ஆயுர்வேத மருத்துவத்தின் பல்வேறு கிளைகளில் அளிக்கப்படவுள்ள பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புத் தகைமைகள் மற்றும் பின்பற்றப்படவேண்டிய கற்கை நெறிகளையும் மற்றும் பயிற்சிகளையும், சித்தியடைய வேண்டிய பரீட்சைகளையும் மற்றும் அத்தகைய பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு சிறப்புத் தகைமைகள் என்பவற்றுக்கான தகைமை விரும்புகின்ற மாணவர்களினால் திருப்திப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் துறையின் இயைபான குழு அல்லது குழுக்களையும் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;” ;

(3) அதன் 15 ஆம் பந்தியில், அப்பந்தியின் (உ) என்னும் உட்பிரிவில் “பட்டங்கள்” என்னும் சொல்லுக்குப் பதிலாகப் “பட்டப்பின்படிப்பு பட்டங்கள், பட்டங்கள்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

10- 1667/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.